6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசுவதற்கு முன்னால், பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவு களுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் :

இன்று மாலை 4 மணி முதல் 6 மணி வரை பேரவைக் கூட்டம் நடைபெறும்.

8–5–1989	திங்கட்கிழமை	பேரவைக் கூட்டம் இல்லை.
9–5–1989	செவ்வாய்க்கிழமை	
10–5–1989	புதன்கிழமை :	
11–5–1989	வியாழக்கிழமை ..	அரசினர் சட்டமுன்வடிவுகள - ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
12–5–1989	வெள்ளிக்கிழமை ..	வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. அரசினர் தனித்தீர்மானங்கள் மற்றும் அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்று தலும்.

7. சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஐ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1989—தொடர்ச்சி.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை சட்டம் ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதை நான் ஆதரித்து, சுருக்கமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இதிலே குறிப்பாக சொல்லப்பட்டிருப்பது நம்முடைய மாநில சிறு சேமிப்பு குழு 'ஸ்டேட் அட்வைசரி போர்ட் ஆஃப் நேஷனல் சேவிங்ஸ்', இந்த தேசிய சேமிப்புக் குழு என்பது ஒரு ஆலோசனைக் குழுதான் என்பது மிகத் தெளிவாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. It is only an Advisory Board